

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் சுவிசேஷ லுத்ரன் திருச்சபையின் பிஷப் டேனியல் ஜெயராஜ், ஜீவராஜ் குருக்கள், சார்லஸ், எட்வின் சார்லஸ், செல்லதுரை, சாலமன், பாரதி, ஜஸ்டின், சத்தியமூர்த்தி, திருமதி பிரசன்னா மெர்சிபாய், என்வால் துரை, ஈஸ்டர் ராஜ், இவான்ஜிலுக்கல் லுத்ரன் திருச்சபையின் ஸ்டான்லி ஜோசப், ஆண்ட்ரூஸ் வாசுதேவன், அன்பழகன், கிரைஸ்ட் லுத்ரன் திருச்சபையின் டாக்டர் ஸ்டான்லி ஜோஸ், உபதேசியார் நலவாரிய துணை தலைவர் போதகர் பால் தயாநிதி, உறுப்பினர் நிக்சன், தென்னிந்திய திருச்சபையின் ஹேமில்டன் மற்றும் சாம்சன், ஜான்சன் மான்சிங், ஜான் சிம்சன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன் பால்கு அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், நிவேதா முருகன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.6.2024) தலைமைச் செயலகத்தில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் காரீப் 2024–25 நெல் கொள்முதல் பருவத்திற்கு ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட

# அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள்!

## நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 27-

“பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்கள்” என்று அவரது நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி., பிரிவு மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன்குமாருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதா வது:-

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து காங்கிரஸ் பேரியக்கத்தின் நாடறிந்த தலைவராக உயர்ந்த பெரியவர் எல். இளையபெருமாள் அவர்களின் அரசியல் வாழ்க்கை என்பது, காலத்தாலும், களத்தாலும் வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதாகும்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் 1924ஆம் ஆண்டு பிறந்த இளையபெருமாள் அவர்கள், சமூக சேவகரும், துறவியுமான சகஜானந்தாவைப் பின்பற்றி எளிய மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் பொது வாழ்க்கைக்கு வந்தவர்.

ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம் - தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப் பெரிய சமூகப் போராட்டங்களை நடத்தியவர் பெரியவர் இளைய பெருமாள் அவர்கள்.

நாடு விடுதலை பெறும் முன்னர், இளம்பருவத்தில் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய இளையபெருமாள் அவர்கள் அப்பணியில் இருந்து ஊர் திரும்பியபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராடி ஆறு மாதம் சிறைவாசமும் அனுபவித்துள்ளார்.

நாட்டின் விடுதலையுடன், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகவும் தொடர்ந்து போராடியுள்ளார். விடுதலைக்குப் பின்னரும்கூட, தேசிய இயக்கமான காங்கிரசில் இணைந்து அரசியல் பணியில் ஈடுபட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கு குரல் கொடுத்தவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர். சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக 1952 முதல் 1967 வரை மூன்று முறை தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். நேரு அவர்கள் பிரதமராக இருந்த போது அமைக்கப்பட்ட அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு ஆணையத்தின் முதல் தலைவராகவும் பணியாற்றியவர் என்பதெல்லாம், இளையபெருமாள் அவர்களின் அரசியல் அடையாளங்கள்.

அவர் தலைமையிலான அகில இந்தியத் தீண்டாமை ஆணையத்தின் பரிந்துரையின் பலனாகவே, தீண்டாமைக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உருவானது என்பதே அவரது அரசியல் இலட்சியத்தின் உன்னதத்திற்கும், விழுமியத்திற்கும் வெளிப்படையான வரலாற்றுச் சான்று.

பெரியவர் இளையபெருமாள் அவர்கள், 1980ல் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமையும் போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞருடன் மிகுந்த நெருக்கமும் நட்புறவும் கொண்டிருந்தவர். 1998ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாக பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். “சலிப்பேறாத சமூகத் தொண்டர்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாய் பாராட்டப்பட்டவர்.

அதுமட்டுமின்றி, பெருந்தலைவர் காமராஜர், கக்கன் போன்ற காங்கிரஸ் தலைவர்களுடன் நெருக்கமாக இருந்தவர் என்பதுடன், தேசிய அளவில் முன்னாள் பிரதமர்கள் நேரு முதல் இந்திரா காந்தி அம்மையார் வரையும் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவரும் ஆவார். இளம்பருவத்து நாடாளுமன்ற உறுப்பினராக அண்ணல் அம்பேத்கரைச் சந்தித்து, அவாது பாராட்டையும் பெற்றவர். இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவரான பெரியவர் இளையபெருமாள் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த 18.04.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்துள்ளேன் என்பதையும் இங்கு பெருமையுடன் நினைவுகூர விரும்பு கிறேன்.

பெரியவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடுவதுடன், “இளையபெருமாள் வாழ்க்கைச் சரித்திரம்” என்ற அவரது வாழ்க்கை வாவாற்று நூலையும் வெளியிடுவது பெரிதும் பாராட்டுதலுக்குரிய நிகழ்வாகும்.

பொதுவாழ்வில் பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு விழா சிறக்க எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க பெரியவர் இளையபெருமாள் புகழ்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### ரூ.100 கோடி மதிப்பீட்டிலான நில மோசடி வழக்கு!

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஜாமீன் மனு தள்ளுபடி!

## கரூர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூன் 27 -

நில அபகரிப்பு புகாரில் முன்ஜாமின் மனு தள்ளுபடி ஆனதைத் தொடர்ந்து, அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமறைவானதாக கூறப்படுகிறது. அவரை கைது செய்ய சி.பி.சி.ஐ.டி., அதிகாரிகள் முனைப்பு காட்டி வருகின்றனர்.

கரூர் மாவட்டம் மண்மங்கலம் தாலுகா குப்பிச்சிபாளையத்தைச் சேர்ந்த பிரகாஷ், கரூர் எஸ்.பி. அலுவலகம் மற்றும் போலீஸ் ஸ்டேசனில் அளித்த புகாரில், தனக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பு நிலத்தை எம்.ஆர்.விஜயபாஸ்கர் போலியாக பத்திரப்பதிவு செய்து கொலை மிரட்டல் விடுத்தார்’ என தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக மாவட்ட குற்றப் பிரிவு போலீசார் எம்.ஆர். விஜயபாஸ்கர் உட்பட 7 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். பிறகு வழக்கு சி.பி.சி.ஐ.டி.,க்கு மாற்றப்பட்டது. இதனால், விஜயபாஸ்கர், கரூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமின் கேட்டு மனுத்தாக்கல் செய்திருந்தார். நேற்று முன்தினம் (ஜூன் 25) இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து எம்.ஆர். விஜயபாஸ்கர் வட மாநிலத்திற்கு தப்பி சென்றதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனையடுத்து, அவரை கைது செய்ய சி.பி.சி.ஐ.டி. போலீசார் அவரை தேடி வருகின்றனர்.



சென்னை, தியாகராயர் நகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 119வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (26.06.2024) அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தொகுதி மேம்பாட்டு நிதியான 3 கோடி ரூபாய் முழுவதையும்

# சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பும் - தொகுதியின் நலப்பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி!

## சட்டப்பேரவையில் அவை முன்னவர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 27-**

**சட்டப்பேரவையில் நேற்று, எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், “சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாய் முழுவதையும், சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் மக்கள் நலப்பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி வழங்கியுள்ளார்” என்று அறிவித்தார்.**



தமிழ்நாட்டில் மொத்தம் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. தமிழக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்கு ஒவ்வொரு வருடமும் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக அரசு வழங்கி வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என பல சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்காக வழங்கப்படும் ரூ.3 கோடி நிதியை சட்டமன்ற உறுப்பினர்களே பயன்படுத்திக்கொள்ள முதலமைச்சர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவ செலவிற்கான பணத்தை வழங்குவது குறித்து ஆய்வு செய்து தெரிவிப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளதாகவும், அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் திட்டம் செயல்படுத்துவதற்கான ஜி.எஸ்.டி.யையும் நீக்குவதற்கு முதலமைச்சர் ஒப்புக் கொண்டதாகவும் அமைச்சர் துரை முருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் அவை முன்னர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்ட தாவது :-

சட்டமன்றத்தைக் குறித்து இந்த அவையில் ஒரு வாதம் வந்தது. வழக்கமாக ஆளுங்கட்சியில் இருந்து, அதுவேண்டும், இதுவேண்டுமென்று கேட்கமாட்டார்கள். எதிர்க்கட்சியில் இருந்து தான் அதிகமாக கேட்பார்கள். தோழமைக் கட்சிகளும் கொஞ்சம் அடக்கி வாசித்துவிட்டார்கள். உறுப்பினர்கள் சிலபேர் சொன்ன கருத்துக்களை நான் முதல்வர் அவர்களிடத்தில் தெரிவித்தேன். இப்போது மூன்று கோடி ரூபாய் எம்.எல்.ஏ.க்களுக்கு fund தரப்படுகிறது. அதில் இரண்டு கோடி ரூபாய் அவர்கள் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் நாம் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும் என்று இருப்பது. அது கொடுத்தும் பிரயோஜனம் இல்லை. கைகட்டியதை போல் இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் மூன்று கோடி ரூபாயையும் அவர்களுடைய இஷ்டத்திற்கு செலவு செய்வதற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். முதல்வர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். எனவே, எம்.எல்.ஏ.க்கள் இனிமேல் மூன்று கோடி ரூபாயை நீங்களே செலவு செய்யலாம். நீங்கள் என்றால் உங்களுக்கு இல்லை, தொகுதிக்குத்தான். (சிரிப்பு) அது ஒன்று. அடுத்து சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கு கொஞ்சம் அந்த Healthக்கு பணம் தேவைப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறேன். முதல்வர் அவர்கள் அதுகுறித்துப் பேசி விட்டு, தெரிவிப்பதாகப் தெரிவித்திருக்கிறார்கள் என்ற செய்தியை உங்களுக்கு தெரிவித்து, இன்றும் நேரம் அதிகமாகிவிட்டது. உறுப்பினர் சக்கரபாணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், GST இருக்கிறது கிட்டத்தட்ட 50 இலட்சம், 60 இலட்சம் போய்விடுகிறது என்று சொன்னேன். அதையும் எடுத்துவிடுவதாக தெரிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.


